1973 நவம்பர் 30]

கூட்டுறவு வீடு கட்டுகிற சங்கங்களின் மூலமாக ரூ. 25,000 வரை வீடுகட்டிக்கொள்ள கடன் தரப்படுகிறது. ரூரல் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக, ரூ. 5,000 வரை வீடுகட்டிக்கொள்ள கடன் தரப்படுகிறது. ஆகவே, அந்த வசதிகளை வைத்துக்கொண்டு வீடுகளை டவுன் பஞ்சாயத்துக்களிலே கட்டிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியம், ஏராளமான வீடுகளை நமது மாநிலத்திலே கட்ட வேண்டி இருக்கிறது. அதிலே, கிராமங்களிலே வீடு கட்டுவதற்கான திட்டங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றதா? கிராமங்களிலே இருக்கிற சாதாரண ஜனங்களுக்கு இலவசமாக நிலம் கொடுத்து, அங்கே வீடு கட்டுவதற்கான ஒரு திட்டம் இருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றனவே, அவைகள் உண்மை தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கிராமங் களிலே தனியாக வீடு கட்டுகிற திட்டம் ஒன்றும் தற்பொழுது அரசிடத்திலே இல்லை. ஆனால், கிராமங்களிலே வீடு கட்ட ரூ. 67 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. 5 சென்ட் வரை நிலம் வைத்திருக் கிறவர்கள் ரூ. 5,000 வரை கடன் பெற்று வீடு கட்டிக்கொள்ளலாம். அரசு ஏராளமான வீட்டு மனைப் பட்டாக்களை ஏழைகளுக்கு வழங்கியிருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் அறி வார்கள் என்று நினைக்கிறேன்.

[முற்பகல் 10-00]

மணல்மேடு கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்கள்.

* 531 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

மாயூரம்-மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் 1973-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில் அதன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய் தார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.